முருகப்பெருமான் துணை

**மகான் கஞ்சமலைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

21.07.2021, புதன்கிழமை

1. தருமனே தரணி காத்தருள
   தணிகாசலன் சக்தியாக வந்தநல்
   ஆறுமுக அரங்கமகா தேசிகனே
   அண்ணலே உன்தவபலம் கூறி
2. கூறியே பிலவ நள்ளி திங்கள்
   குறைவிலா பஞ்சதிகதி புந்திவாரம்
   (பிலவ வருடம் ஆடி மாதம் 5ம் நாள், 21.07.2021 புதன்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசி
   தேசிகனுக்கு கஞ்சமலைச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான அன்னதான நெறியை
   ஞானமாக மக்களுக்கு அருளும்
   ஞானதேசிகன் வழிகளை ஏற்று
4. ஏற்று உலகமக்கள் வருக
   எல்லா துன்பங்களும் விலகி
   மாற்றம் மக்களிடை காண்கும்
   மரணம் வெல்லும் சக்தி அருளும்
5. அருளும் அரங்கன் சூட்சும பலம்
   அறமாக உலகில் பரவிவர
   அருளாக வரும் தீட்சைதன்னை
   அரங்கமகான் வழி ஏற்றுநன்கு
6. ஏற்றுமே நித்திய பூசையாக
   இடைவிடா தொடர்ந்து செய்து
   உற்றதொரு தயவு பெருகும்படி
   உயர் தருமம் செய்து கொண்டு
7. செய்து கொண்டு உலகமெங்கும்
   சேவை செய்து சீடர்களாகி
   மெய்ஞானம் பயின்று வருக
   மேலவர்கள் அருளாசி பெற்றுவர
8. வருகவே நிலைமைகள் மாறும்
   வளமான இயற்கைச் சூழலும்
   பெருகியே இந்த கலியுகம்
   பேராசான் அரங்கன் ஆசிபட

9. ஆசிபட பேரிடர் துன்பங்களும்
அகிலத்தை விட்டு விலகி
ஆசியதும் அனைத்து ஞானிகள்
அருளாசியாக எங்கும் நிரம்பி

10. நிரம்பி இந்த பேருலகம்
நிலமதனில் மாற்றம் காணும்
வரம்பிலா வளர்ந்த சிக்கல்கள்
வதை உலக வன்கொடுமைகள்

11. கொடுமைகள் அனைத்தும் சடுதி
குவலயம் விட்டு உடன்விலகி
ஈடேறும் இந்த கலியுகம்தானும்
இணையிலா ஞான யுகமாகவே
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–